வதற்கு ஜே. வி. வி டி. திட்டத்தில் எடுக்கப்படுகின்றன, ஆனால் நகராட்சிப் பள்ளிக் கட்டிடங்கள்—எங்களுடைய பரமக்குடி நகராட்சியில் கிட்டத்தட்ட இரண்டு நடுநிலைப் பள்ளிகள், ஏழு ஆரம்பப் பள்ளிகள் உள்ளன, இவைகளுக்கு எல்லாம் கட்டிடம் கட்டுவதற்கு எந்தவிதமான அரசு நிதியுதவியும் அளிக்கப்படவில்லை, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய பிறகு இதற்கென்று நிதியொதுக்க முடியாது என்ற இந்தக் கட்டத்தில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த கட்டிடம் கட்டுவதற்கு நிதியொதுக்கித் தர வழிவகுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி நடந்து கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் இவ்வாறு இடிந்த நிலையில் உள்ள பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்தப் பிரச்சினைக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதற்கு வருகிற நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா, நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டுக் காலமாக நகராட்சி நிதிநிலைமை போதிய அளவுக்கு அதிகமாகவுள்ள இதுபோன்ற நகராட்சி பள்ளிக் கட்டிடங்கள் புதுப்பிக்கப்படவேண்டும் என்று தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி இந்த ஆண்டே இந்தப் பள்ளிக்கூடம் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் புள்ளான் விடுதி காகிதத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பாதிப்பு குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார், திரு. எஸ். சண்முகநாதன்,

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 30]

முற்பகல் 11-45

*திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம். ஆலங்குடி தொகுதி. புள்ளான் விடுதியிலுள்ள நிஜாம் பேப்பர் அண்ட் போர்ட் நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுக்கா புள்ளான் விடுதியில் உள்ள நிஜாம் பேப்பர் மற்றும் போர்ட்ஸ் என்ற நிறுவனம் சுமார் 200 தொழிலாளர்களையும் 50 பணியாளர்களையும் 200 ஒப்பந்தத் தொழிலாளர்களையும் கொண்டு இயங்கி வந்தது. இந்த நிறுவனம் நஷ்டத்தில் இயங்கி வந்ததால் ஏப்ரல் 1992 முதல் இயங்கவில்லை, தொழிலாளர்களுக்கு 1—2—1992 முதல் 14—4—1992 முடிய உள்ள காலத்திற்கான ஊதியமும் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக ஊதியம் வழங்கப்படாமை குறித்து தொழிற் சங்கங்கள் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து, திருச்சி தொழிலாளர் துணை ஆணையர்—நிறுவனத்திலுள்ள (1) நிஜாம் காகித ஆலை அண்ணா தொழிற் சங்கம் (ஏ.டி.பி,). (2) நிஜாம் பேப்பர் மற்றும் போர்ட்ஸ் மில்ஸ் தொழிலாளர்கள் சங்கம் (ஏ,ஐ,டி யு,சி,). (3) மற்றும் நிர்வாகப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டார்.

(2) இந்த நிறுவனம் 1988ஆம் ஆண்டு முதல் நலிவடைந்த நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளதால் இது சம்பந்தமாக பி,ஐ,எப்,ஆர், வழக்கு எண். 245/87-ல் விசாரணை நடைபெற்று வருவதாகவும். மேலும் இந்த நிறுவனத்திற்கு நிதி உதவி வழங்கும் பொருட்டு பி,ஐ,எப்,ஆர், Board for Industrial and Financi l Reconstruction ஐ,டி,பி,ஐ-க்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் ஐ,டி,பி,ஐ, தற்போது போதிய நிதி வசதி இல்லை எனவும் நிர்வாகத்திற்குத் தெரிவித்துள்ளது, தொழிற் சங்கங்களும் நிர்வாகமும் தாங்கள் நேரடியாகக் கலந்து பேசி ஒரு சுமூக உடன்பாடு காண்பதற்கு பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய சம்பள பாக்கி மற்றும் போனஸ் தொகை

தொடர்பாக, முறையே சம்பளப் பட்டுவாடா சட்டம் மற்றும் தொழிற் தகராறு சட்டப்பிரிவு 33-சி(2)-ன் கீழ் வழக்கு தாக்கல் செய்து நிவாரணம் காண உள்ளதாகத் தொழிற் சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் இது வரை சம்பளப் பட்டுவாடா சட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளி மட்டும் மனு தாக்கல் செய்து ரூ. 4000 சம்பள பாக்கி வழங்க உத்திரவிட்டு நிர்வாகம் இதனை வழங்காததால் வருவாய் வசூலிப்பு சட்டத்தின் கீழ் வசூலிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(3) தொழிலாளர்கள் 200-க்கு மேல் பணியாற்றிவரும் இந்நிறுவனத்தைத் தொழிற் தகராறு சட்டப்பிரிவு 250-இன் கீழ் முன் அனுமதி பெறாமல் மூடியதற்காக நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுப்பது குறித்துத் தொழிலாளர் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>திரு. எஸ். சண்முகநாதன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டிருக்கிற அந்த அறிக்கையைப் பார்த்தேன். அந்த அறிக்கையிலே 400, 450 தொழிலாளர்களைக் கொண்ட நிஜாம் பேப்பர் மில் கடந்த 3 ஆண்டு காலமாக மூடிக் கிடப்பதாகவும். அங்குள்ள தொழிற்சங்கங்களான, நிஜாம் காகித ஆலை அண்ணா தொழிற் சங்கம், நிஜாம் பேப்பர் அண்ட் போர்ட்ஸ் மில்ஸ் தொழிலாளர்கள் சங்கம் ஆகியவை அந்த நிர்வாகத்தினரோடு பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், திருச்சியிலே இருக்கின்ற தொழிலாளர் நல துணை ஆணையாளர் அவர்களும் இதுபற்றிக் கலந்து பேசி, விசாரித்து வருவதாகவும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டு காலமாக, அந்தத் தொழிற் சங்கங்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே ஏற்பட்ட பேச்சு வார்த்தையிலே உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது. ஆகவே தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், அந்த பேப்பர் மில் இயங்குகின்ற வகையிலே விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சே. ரகுபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளாக அல்ல. 1—4—1992 முதல்தான் அங்கே அந்த ஆலை மூடப்பட்டு இருக்கிறது. இது பொருளாதாரப் பிரச்சினை காரணமாக மூடப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். வேறு எந்தப் பிரச்சினையும் கிடையாது. எனவே, பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து தங்களை மீட்டுக்கொள்வதற்கு, அவர்கள் பி.ஐ.எப்.ஆர். இடத்திலிருந்தும், ஐ.டி.பி.ஐ. இடத்திலிருந்தும் இப்போது நிதி உதவி கேட்டிருக்கிறார்கள். நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன், அந்த ஆலை துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 200 நிரந்தரத் தொழிலாளர்களும், 200 தற்காலிகத் தொழிலாளர்களும், 10 ஆய்வாளர்கள், அதிகாரிகள் பணியாற்றியிருக்கிறார்கள், அவர்கள் செய்த பணிக்காக சம்பளம்கூட வழங்கப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதிலே ஒரு தொழிலாளர் மட்டும் மனு தாக்கல் செய்து, 4 ஆயிரம் ரூபாயை சம்பள பாக்கி தரவேண்டும் என்று உத்தரவிட்டும், இன்று வரை அந்த நிர்வாகம் அதை வழங்காத சூழ்நிலை இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே தொழிற்சாலைகள் ஏதும் நிறைய இல்லை. ஒன்றே ஒன்று, ஆலங்குடியிலே இருக்கின்றது. எனவே, இந்த நிஜாம் பேப்பர் மில் விரைவிலே துவங்குவதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் தங்களுக்கு உரிய சம்பளப் பாக்கிக்காக சம்பளப் பட்டுவாடா சட்டத்தின் கீழ் அவர்கள் உரிய வழக்குகளைத் தொடர்ந்தால், அதைப் பெற்றுத் தருவதற்கு அரசு உரிய வழிவகைகளைச் செய்து தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு மற்றும் வினாக்கள் குறித்து.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நிறைய கேள்விகளைக் கேட்டிருக்கிறோம். அந்தக் கேள்விகள் எல்லாம் இந்தக் கூட்டத் தொடர் முடிவுறுகிறபோது, அவைகள் எல்லாம் முடிவு அடைகிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். இன்றைய தினம் இப்பேரவைக் கூட்டத் தொடரினுடைய கடைசி நாள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஏராளமான கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங்களில் பெரும் பகுதியானவற்றுக்கு பதில் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் இரண்டு இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்து வந்திருக்கிற காரணத்தால், எடுத்தவை போக, பதில் வந்திருக்கிற எல்லா கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்களும் பேரவை முன்னர் இன்று வைக்கப்பட்டு இருக்கின்றன. இது தவிர இன்னும் பல கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு துறையிலிருந்து பதில் வராத நிலைமை இருக்கிற காரணத்தால், நாம் கடைபிடித்து